# 22.09.2026 செய்திகள்

## ரூ.5,000 கோடி பயன்பாடற்ற சொத்துகளை பணமாக்கும் திட்டம்!

- பல்வேறு மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் அரசுத்துறைகளின் வசம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், கட்டடங்களும் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் செயலற்ற மூலதனமாக முடங்கியுள்ளன.
- இவற்றை விற்று அல்லது நீண்ட கால குத்தகைக்கு விட்டு, திரட்டப்படும் நிதியை நாட்டின் அடிப்படை உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

» ஆழமான தாக்கம்

- இந்த நடவடிக்கை வெறும் நிலங்களை விற்பது மட்டுமல்ல; இது நாட்டின் பேரியல் பொருளாதாரம் (மேக்ரோ எகனாமிக்ஸ்) சுழற்சியை ஊக்குவிக்கும் ஒரு வியூகமாகும்.
- இதன் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார தாக்கங்களை அதிகாரிகள் விரிவாக விளக்குகின்றனர்.

» விளைவு

- இந்த 5,000 கோடி ரூபாயை மத்திய அரசு உள்கட்டமைப்பு மூலதனச் செலவினங்களுக்கு மாற்றும் போது, அதன் பொருளாதார மதிப்பு 2.5 முதல் 3 மடங்கு வரை இருக்கும்.
- அதாவது, இந்த நிதி சாலைகள், துறைமுகங்கள், மின் உற்பத்தி என முதலீடு செய்யப்படும்போது, அது சுமார் ரூ.12,500 கோடி முதல் ரூ.15,000 கோடி வரையிலான பொருளாதார நடவடிக்கைகளைத் தூண்டப்படும் என்கின்றனர் மத்திய நிதித்துறை அதிகாரிகள்.
- பெரிதும் லாபம் ஈட்டாத அல்லது மூடப்பட்ட பல பொதுத்துறை நிறுவனங்களின் உதாரணமாக, பிஎஸ்என்எல், எம்டிஎன்எல், ஹெச்எம்டி வசம் மிகப்பெரிய பரப்பில் நிலங்கள் உள்ளன.
- இவற்றை என்எல்எம்சி மூலம் பணமாக்குவதன் மூலம், அந்த நிறுவனங்களின் கடன் சுமைகள் குறைக்கப்படுவதோடு, வங்கிகளின் வாரா கடனும் (என்பிஏ) குறையும்.
- அரசின் வரி வருவாய் ஈட்டும் திறன் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் இருக்கும் நிலையில், இது போன்ற 'வரி அல்லாத வருவாய்கள்' அரசின் நிதிப் பற்றாக்குறையைக் கட்டுக்குள் வைக்கப் பெரிதும் உதவுகின்றன. இதனால் அரசு அதிக வட்டிக்கு கடன் வாங்குவது குறையும்.

» துல்லிய மதிப்பீடு

- எதிர்கால பணப்புழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தள்ளுபடி பணப்புழக்க முறை மற்றும் ஒப்புமை சந்தை மதிப்பீடு (சிஎம்வி) ஆகியவற்றைப் பயன்படுத்தி நிலத்தின் மதிப்பை நிர்ணயித்தல்.

» **மின்னணு ஏலம்**

- முதலீட்டாளர்களிடையே சமமான போட்டிச் சூழலை உருவாக்கி, அதிகப்படியான வருவாயை ஈட்ட வெளிப்படையான மின்னணு ஏலமுறை பின்பற்றப்படுகிறது.
- சில சொத்துகளை முழுமையாக விற்காமல், ரியல் எஸ்டேட் முதலீட்டு அறக்கட்டளைகள் போன்ற நவீன நிதியியல் அமைப்புகள் மூலம் சில்லறை முதலீட்டாளர்களையும் இந்தத் திட்டத்தில் பங்கேற்க வைக்கும் உத்திகளை அரசு பரிசீலிக்கலாம் என்கின்றனர் இந்தத் துறை சார்ந்த வல்லுநர்கள்.
- தேசிய நிலப் பணமாக்கல் கழகத்தின் இந்த ரூ.5,000 கோடி மதிப்பிலான நடவடிக்கை, இந்தியப் பொருளாதாரத்திற்கு வளம் சேர்க்கும் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் சரிவர செயல்படுத்தப்பட்டால், இந்தியாவின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தை ஈட்டித் தரும் வற்றாத ஜீவநதியாக உருவெடுக்கலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

## யுபிஐ பரிவர்த்தனைக் கட்டணம்

- இந்தியாவில் 55.48 கோடிக்கும் அதிகமானோர் யுபிஐ பரிவர்த்தனையைப் பயன்படுத்துகின்றனர். ஒவ்வொரு மாதமும் 2,100 கோடிக்கும் அதிகமான பரிவர்த்தனைகளை யுபிஐ கையாளுகிறது. இந்தச் சூழலில், இப்படியான அறிவிப்பு வெளியாகியிருப்பது விவாதங்களை எழுப்பியிருக்கிறது.
- தனிநபர் பரிவர்த்தனைகளுக்குக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது என்று சொல்லப்பட்டாலும் ரயில்வே.
- ரயில்வே, எரிவாயு, தொலைத்தொடர்பு, காப்பீடு போன்றவற்றுக்கு ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் ரூ.5 சேவைக் கட்டணம் வசூலிக்கப்படும் என இந்திய தேசியப் பரிவர்த்தனைக் கழகம் தெரிவித்துள்ளது.
- 10 ஆண்டுகளுக்கு முன் இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்பார்வையில் யுபிஐ சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டணமில்லாப் பரிவர்த்தனை என்பதால், சாமானியர் முதல் பெருவணிக நிறுவனங்கள் வரை இந்தச் சேவையைச் சார்ந்திருக்கின்றனர்.
- 2025-2026 ஆம் நிதியாண்டில் யுபிஐ மூலம் தோராயமாக 314 லட்சம் கோடி ரூபாய் பரிவர்த்தனை நடைபெற்றிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- கட்டணமில்லாப் பரிவர்த்தனைக்கு உத்தரவாதம் அளித்துவிட்டுத் தற்போது வணிகர் தள்ளுபடிக் கட்டணத்தை அறிமுகப்படுத்தியிருப்பதும் குறிப்பிட்ட சில துறைகளுக்குச் சேவைக் கட்டணத்தை விதித்திருப்பதும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.
- மாதம் ஒரு லட்சம் ரூபாய் வரை வியாபாரம் நடைபெறுகிற நிறுவனங்களில் ரூ.2,000க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைக்கு 0.4% கட்டணம் என்பது புறக்கணிக்கத்தக்க தொகையல்ல.
- ரூ.75,000க்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு அதிகபட்சம் 300 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பெருநிறுவனங்கள் இந்தக் கட்டணத்தை மறைமுகமாக வாடிக்கையாளர்கள் மீது திணிக்கும் சாத்தியமும் இருக்கிறது.
- அல்லது ரூ.2,000க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளைச் சிறு சிறு தொகையாகப் பிரித்துச் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு வாடிக்கையாளர்கள் தள்ளப்படக்கூடும்.
- இன்று விதிக்கப்பட்டிருக்கும் சேவைக் கட்டண விகிதம் நாளை அதிகரிக்காது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- யுபிஐ பரிவர்த்தனைகளில் நீடிக்கும் மற்றுமொரு சிக்கல். தனியார் பெருநிறுவனங்களின் ஏகபோக ஆக்கிரமிப்பு. இந்தியாவில் 80% யுபிஐ பரிவர்த்தனைகள் 'ஃபோன்பே', 'கூகுள் பே' உள்ளிட்ட இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் வழியாக மட்டுமே நிகழ்கின்றன.
- இவற்றுக்கு அடுத்தபடியாகவும் 'பேடிஎம்', 'அமேசான் பே' உள்ளிட்ட தனியார் நிறுவனங்களே அதிகப் பங்கை வகிக்கின்றன.
- இவை தனியார் வங்கிகளின் வழியாகவே செயல்படுத்தப்படுகின்றன. நம் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு இதில் மிக மிகக் குறைவு.
- தனியார் நிறுவனங்களின் மூலம் 30%க்கு மேற்பட்ட பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்கிற இந்திய தேசியப் பரிவர்த்தனைக் கழகத்தின் வழிகாட்டுதலை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.
- போதுமான கண்காணிப்பு அமைப்புகளும் இல்லாத நிலையில், யுபிஐ பரிவர்த்தனைகளுக்குத் தற்போது விதிக்கப்பட்டிருக்கும் வணிகர் கட்டணத்தையும் தனிநபர் சேவைக் கட்டணத்தையும் மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியம்.

## பிரிக்ஸ் மாநாடும் புது டெல்லிப் பிரகடனமும்

- இதற்கு முன்பும் இந்தியா மூன்று முறை தலைமை வகித்திருக்கிறது (2012, 2016, 2021). அப்போது அமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருந்தது.
- 2026இல் நிறுவப்பட்ட பிரிக்ஸில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய ஐந்து நாடுகள்தாம் வெகுகாலத்துக்கு அங்கம் வகித்து வந்தன.
- இந்த ஐந்து நாடுகளின் ஆங்கிலப் பெயர்களின் முதலெழுத்தின் சேர்க்கைதான் BRICS என்றானது.
- 2024இல் எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா ஆகிய ஆறு நாடுகள் இணைந்தன. உறுப்பினர் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்தது.

» முக்கியத்துவம்

- இப்போது உலகின் சரிபாதி மக்கள், பிரிக்ஸ் நாடுகளில் வசிக்கிறார்கள். உலகப் பொருளாதாரத்தின் ஐந்தில் இரண்டு பங்குக்கும், உலக வணிகத்தில் கால் பங்குக்கும், பிரிக்ஸ் நாடுகள் பங்களிக்கின்றன.
- பிரிக்ஸின் முக்கியத்துவத்துக்கு இந்த எண்ணிக்கை மட்டும் காரணம் இல்லை. ஜி-7 நாடுகள், நேட்டோ நாடுகள், மேற்கு நாடுகள் அல்லாத ஒரு கூட்டமைப்புதான் பிரிக்ஸ்.
- உலகின் தென்கோள நாடுகளின் முகமாக அது உருவெடுத்து வருவதும் அதனால்தான். இந்த மாநாடு இரண்டு அம்சங்களில் கவனம் பெறுகிறது.
- ஒன்று, உள்முரண்கள் மிக்க உறுப்பு நாடுகள் சில (இந்தியா-சீனா, ஈரான்-அமீரகம், எகிப்து-எத்தியோப்பியா) அருகருகே அமர்ந்து தங்கள் சிக்கல்களைப் பேசுவதற்கு மாநாடு களம் அமைத்துக் கொடுத்தது.
- இரண்டு, இந்த முரண்களைத் தாண்டி மாநாட்டின் இறுதியில் உறுப்பு நாடுகளால் ஒரு மனதாகத் தீர்மானங்களை நிறைவேற்ற முடிந்தது. இந்தத் தீர்மானம் 'புதுடெல்லிப் பிரகடனம்' என்று அழைக்கப்படுகிறது.
- இந்தப் பிரகடனம் 140 பத்திகளுக்கு நீண்டது. போர், பயங்கரவாதம், உடல்நலம், கல்வி, வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு, வணிகம், பண்பாடு முதலான பல்வேறு கூறுகளைப் பேசுகிறது. அரசியல் ரீதியாக இதில் மூன்று அம்சங்கள் கவனத்துக்கு உரியவை.

» ஈரான் போர்

- ஈரான் மீது அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதல், ஐநா சாசனத்துக்கும் பன்னாட்டு மனிதநேயச் சட்டங்களுக்கும் எதிரானவை.
- இதற்கு எதிர்வினையாக, அமீரகம் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் நிறுவப்பட்டிருக்கும் அமெரிக்க ராணுவத் தளங்களைத் தாக்கிவருகிறது ஈரான்.
- பிரிக்ஸ் அமைப்பு, அமெரிக்கத் தாக்குதலைக் கண்டிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது ஈரான். மாறாக, ஈரான் நிகழ்த்திவரும் எதிர்த் தாக்குதலைக் கண்டிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது அமீரகம்.
- இறுதியில், ஒரு சமரச ஏற்பாடாக, தாக்குதல், எதிர்த்தாக்குதல் இரண்டும் கூட்டறிக்கையில் இடம்பெறாது எனவும், எந்தத் தாக்குதலும் குடிமக்களை நோக்கி அமையக்கூடாது என்கிற பொதுவான அம்சம் அறிக்கையில் சேர்க்கப்படும் என்றும் முடிவானது.
- சீனாவும் ரஷ்யாவும் இணைந்து நடத்திய ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு, இம்மாதத் தொடக்கத்தில் நடைபெற்றது.
- அதில், ஈரான் மீதான அமெரிக்க–இஸ்ரேல் தாக்குதலைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேறியது. இந்தியா இதுகாறும் தனது நண்பர்களான அமெரிக்காவையோ இஸ்ரேலையோ, அவர்தம் அத்துமீறலுக்காக நேரடியாகக் கண்டித்ததில்லை.
- என்றாலும், இந்தத் தீர்மானத்தை இந்தியா எதிர்க்கவில்லை. ஒரு வேளை புது டெல்லிப் பிரகடனத்தில் அமெரிக்கா–இஸ்ரேல் மீதான கண்டனம் இடம்பெற்றிருந்தால், மாறிவரும் சூழலில் இந்தியா ஒப்புக் கொண்டிருக்கக்கூடும்.

» பாலஸ்தீன இன அழிப்பு

- கடந்த மூன்று ஆண்டுகளில் காஸாவின் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில் 72,000க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.
- இதில் பெண்களும் குழந்தைகளும்தான் அதிகம். இதை 'இன அழிப்பு' என்றும் இஸ்ரேலியப் பிரதமரைப் போர்க் குற்றவாளி என்றும் ஐநா அறிவித்திருக்கிறது.
- இப்போது புது டெல்லிப் பிரகடனம் இந்தத் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறது. யூதர்களும் அரேபியர்களும் இசைந்து வாழும் 'இரு நாட்டுக் கொள்கை' பின்பற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.
- இந்த மூன்று ஆண்டுகளில், இந்தியா இஸ்ரேலை நேரடியாகக் கண்டித்ததில்லை. மாறாக, இஸ்ரேலுடன் தோளோடு தோள் நிற்போம் என்று கூறிவந்திருக்கிறது.

» தன்னிச்சைத் தடைகள்

- சில நாடுகள் தன்னிச்சையாக விதிக்கும் பொருளாதார ரீதியிலான தண்டனைத் தடைகளையும் ஒருதலைப்பட்சமான தீர்வைகளையும் பிரகடனம் கடுமையான சொற்களில் கண்டிக்கிறது.
- இந்தச் சில நாடுகள் யார் என்பதில் எந்த ரகசியமும் இல்லை. அமெரிக்கா விதிக்கும் அதீத வரிகளாலும், ரஷ்ய–ஈரானிய எரிபொருள்கள் மீதான அமெரிக்கத் தடைகளாலும் இந்தியா நேரடியாகப் பாதிக்கப்படுகிறது.
- எனினும் அமெரிக்காவுக்கு எதிராக, சில வேளைகளில் மட்டும், அதுவும் மிக மென்மையான சொற்களைத்தான் இந்தியா பயன்படுத்தியிருக்கிறது. எனில், இந்தப் பிரகடனத்தின் வாசகங்களை இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கிறது.

» திசை வழி

- தென்கோளத்தின் கருத்து வல்லரசுகளின் தன்னிச்சையான போக்குக்கு எதிராகவும், பன்மைத்துவத்துக்கு ஆதரவாகவும் திரள்கிறது என்கிற செய்தியை இந்தப் பிரகடனம் வலுவாக முன்வைக்கும்.
- ஈரான் போரால் எரிபொருள் விலை உயர்ந்து விட்டது; இஸ்ரேல் உலக அளவில் தார்மிக ஆதரவை இழந்து வருகிறது; அமெரிக்க வரிகளால் இந்திய வணிகம் பாதிக்கப்படுகிறது.
- ஆகவே அமெரிக்க–இஸ்ரேல் ஆதரவுப் போக்கை இந்தியா இனி மெல்லக் கைவிடும் என்கின்றனர்.



SURESH'